1984 மார்ச் 14]

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு தனியார் துறையில் செய்வதற்கு மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு, ஒன்றியத் தேர்தலுக்கு இட ஒதுக்கீடு செய்து, சட்டத்தை நிறைவேற்றி, அதை நீதிமன்றத்தில் தடுத்து இருக்கிறார்கள். அதைப் போலவே இதற்கும் இந்த அரசு ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்து, அதை ஏகமனதாக நிறைவேற்றி, அதை நீதிமன்றத்தில் தடுத்து நிறுத்தினாலும் பரவாயில்லை, அதற்கு வழிவகை செய்யும் வகையில், அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வர தமிழக அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, இது பற்றி சட்டத் துறையின் மூலமாகத்தான் பரிசீலனை செய்ய முடியும்.

சிறு தொழில் துவங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்.

312—(*வினா எண் 13944)— திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் சிறு தொழில் துவங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

(ஆ) 28-2-1982 முடிய எத்தனை ஆதி திராவிட மக்களும் பழங்குடியினரும் சலுகைகளைப் பெற்றுள்ளனர் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :—(அ) ஆதி திராவிடர்களுக்கு தொழில் தொடங்க வட்டியில்லாக் கடன் அளிக்கும் திட்டத்தின் கீழ் வழங்கும் அதிக அளவு கடன் தொகை ரூ. 15,000 குறைந்த அளவு கடன் தொகை ரூ. 125. அரசால் ஏற்கப்பட்டுள்ள 31 வகையான தொழில்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. மானியம் அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் 28-2-1982 முடிய கடனுதவி பெற்றவர்கள் எண்ணிக்கை —

ஆதி திராவிடர்கள்	..	16,256
பழங்குடியினர் ..	..	111
மொத்தம்	..	16,367

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் தொடங்க கடன் உதவி அளிக்கும் திட்டத்தை, கொல்லிமலையில் ஏழு கிராமங்கள் அடங்கிய தாலுக்கா தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியிலே ஒரு புதிய தொழில் அமைப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தனியாக கொல்லிமலைப் பகுதியை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வர முடியாது. மாநிலம் முழுவதுமாகப் பார்த்து எந்த எந்த மாவட்டத்திற்கு இந்த உதவி தேவைப்படுகிறது என்று பார்த்து, கடன் உதவி வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் மேலும் வழங்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எவ்வளவு தொகை கடன் கொடுக்கப்பட்டுள்ளது? அதில் எத்தனை பேர் கடனைத் திருப்பிச் செலுத்தியுள்ளார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு வரையில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சிறுதொழில் கடன் ஏறத்தாழ 1,42,33,805 ரூபாய். இதுவரை வசூலாகி இருப்பது 12,51,426 ரூபாய். நிலுவையில் இருக்கக்கூடிய தொகை 1,29, 82,378 ரூபாய். இதனால் பயனடைந்திருப்பவர்கள் 18,260 பேர்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வட்டி இல்லாக் கடன் என்ற தலைப்பில் ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிற நிதி மிகக் குறைவாக இருக்கிறது. சான்றாக கடந்த ஆண்டு ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்தான் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகமான அளவுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து கடன் கோரி விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த 10 இலட்சம் ரூபாய் போதாது என்பதை உணர்ந்து, மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி, பொருளாதார சிறுபான்மையை கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி, ஆண்டுதோறும் குறைந்தது ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கீடு செய்து, இந்த மக்களை வாழவைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிடர்களுக்கு என்று 10 இலட்ச ரூபாயும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கு ஒரு இலட்ச ரூபாயும், பழங்குடி மக்களுக்கு 50 ஆயிரம் ரூபாயுமாக 11,50,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அதிகமான அளவுக்கு ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் இந்தத் திட்டத்தின் பயனைப் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதை இந்த அரசு அறிந்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இதிலிருந்து கடன் உதவி பெறுகின்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவது முறையாக இல்லாத காரணத்தால், இதை மாற்றி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தாட்கோ (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி நிறுவனம்) மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சிறுதொழில் மானியம் மற்றும் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இதையும் சேர்க்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அந்த வகையில் இனிமேல் இந்த திட்டத்தின் கீழ் வழங்கும்போது முழுக் கடன் தொகையில் 25 சதவீதம் மானியமாகவும், ''தாட்கோ'' மூலம் இதர பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிக்காக 25 சதவீதம் குறியிட்டு கடனாகவும் (மார்ஜினல் மணி) வழங்கவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கவும் அவர்களுக்கு வசூல் செய்யப்படுகிற கடன் உதவிக்காக 4 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டுமென்றும் தற்போது இருக்கின்ற முறையை இந்தத் திட்டத்தில் மாற்றிக் கொள்ளலாம என்றும் அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அதிகமான ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் பயன் பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம்.

313—(*வினா எண் 18986)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?

(ஆ) எப்போது இப்பணி தொடங்கப்படும் ?

TRUTH ALONE TRIUMPHS